Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*
பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

# Matrilineal Society and Moothin Mullai

**Dr. K. G. Anithakumari,** Head & Associate Professor, P.G. & Research Department of Tamil,
S.T. Hindu College, Nagercoil -2. Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0002-7005-8887
**DOI: 10.5281/zenodo.14744503**

## Abstract

*This article entitled 'Thaivazhi Samugamum Moothin Mullaiyum' contains stories about the bravery of Marava women and stories about the noble deeds of men in society and war. In addition, it does not tell about the nature of hard work but also the nature of dedicating oneself to the development and safety of the nation. It also tells as well as the desire to sacrifice one's son for the country, regardless of whether he is the only son. The literary facts mentioned here reveal that women are superior in hard work and bravery in supporting men. To raise awareness among women, ideas on culture, customs, worship, friendship, gifts, hospitality, etc. are also examined in the article. Generally, songs composed from several centuries ago three centuries ago are included in Sangam literature. It records the life events that took place during these times. They exhibit the matriarchal power of women. Hence, this article decodes the sources related to the events in "Moothin Mullai".*

**Keywords:** *Moothinmullai*, Matrilineal Society, Marava Women, Bravery.

## References

[1] Ayyanarithanar. *Puraporul Venba Malai, Puliurkesigan Urai.* Saratha Publishing House, Chennai, 2009.
[2] Alex Aruldasan, G. "Velan Magalir Samugavial Chikkalgal." *International Journal of Tamil Language and Literature*, Vol.2, Special Issue 3, Feb.2020, p.1.
[3] Elmapuranar, *Tholkappiyam.* Saratha Publishing House, Chennai, 2017.
[4] Savithri. *Samugaviyal*. Mohan Publishing House, Chennai, First Edition, 1987, p.126.
[5] Devadas, P.C. "Viviliyathil Kanam Kanda Pengal." *International Journal of Tamil Language and Literature*, Vol.2, Special Issue 3, Feb.2020, p.2.
[6] Bhaktavatsala Bharathi. *Panpattu Manudaviyal*. Meiyappan Publishing House, Chennai, 2016.
[7] Parimanam, A. P. & Balasubramanian, K.V. *Purnanuru* Volume 1, 2, New Century Book House, Ambathur, Chennai, 2004.
[8] Mathayan, P. *Sanga Ilakiyathil Kudumbam.* New Century Book House, Ambathur, Chennai, 2010.
[9] Nagarasan, V. *Kurunthokai*. New Century Book House, Ambathur, Chennai, 2007.
[10] *Holy Bible*. NJKV Edition.

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

# தாய்வழி சமூகமும் மூதின்முல்லையும்

**முனைவர் க. கோ. அனிதாகுமாரி**, தலைவர் & இணைப்பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்,
தெ. தி. இந்துக்கல்லூரி, நாகர்கோவில் – 629002, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-7005-8887
DOI: 10.5281/zenodo.14744503

## ஆய்வுச்சுருக்கம்

*'தாய்வழி சமூகமும் மூதின்முல்லையும்' என்ற தலைப்பில் இடம்பெற்றுள்ள இக்கட்டுரையில், மறக்குடி மகளிரின் வீரம், சமூகத்தில் ஆடவர்களின் மாண்பு மிக்க வீரச் செயல்கள் குறித்த செய்திகள், போர் ஆகியன இடம்பெற்றுள்ளன. மேலும் உழைப்பு மட்டுமின்றி தேசத்திற்காகத் தன்னையே அர்ப்பணிக்கின்ற தன்மை, அத்துடன் தன் ஓரே மகன் என்றும் பாராமல் மகனையும் நாட்டிற்காக வீரமரணம் அடைய வேண்டும் என்ற வாஞ்சை போன்ற தியாகச் சிந்தனைகள் விளக்கப்பட்டுள்ளன. பெண்கள் ஆண்களுக்குத் துணைநின்று உழைப்பிலும் வீரத்திலும் சிறந்தவர்கள் என்பதை இங்கு குறிப்பிட்டுள்ள இலக்கியத் தரவுகள் வெளிப்படுத்துகின்றன. பெண்களுக்கு விழிப்புணர்வூட்டும் வகையில் பண்பாடு, பழக்கவழக்கங்கள், வழிபாடுகள், நட்பு, கொடை, விருந்தோம்பல் முதலியன குறித்த கருத்துக்களையும் இங்கு ஆராயப்பட்டுள்ளன.*

**குறிப்புச் சொற்கள்**: மூதின்முல்லை, தாய்வழி சமூகம், மறக்குடிமகளிர், வீரம்.

## முன்னுரை

சமூக அசைவுகளை அதன் போக்குகளை இலக்கியங்கள் ஆவணப்படுத்துகின்றன. சமூகம் நேற்று எப்படி இருந்தது. இன்று எப்படி இருக்கும் என்பதையும் இலக்கியத்தின் ஊடாக உணர்ந்து கொள்ள முடியும். அந்த அடிப்படையில் தமிழ்ச் சமூகத்தின் காலப்பழமையாக இருக்கும் வாழ்க்கையை தமிழிலக்கியத்தின் முன்னோடி இலக்கியமான சங்க இலக்கியம் விரிவாகப் பதிவு செய்கிறது. பல்வேறு காலகட்டத்தில் முதலில் பாணர் மரபாகவும் பின்னர் புலவர் மரபாகவும் உருவான பாடல்கள் பிற்காலத்தில் நூல்களாகத் தொகுக்கப்பட்டன. அவை சங்க இலக்கியம் என்னும் அடையாளமும் பெற்றன. பொதுவாக பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்து தொடங்கி கிட்டத்தட்ட மூன்று நூற்றாண்டுகள் வரை உருவான பாடல்கள் சங்க இலக்கியத்தில் இடம்பெற்றுள்ளன. இத்தனை நூற்றாண்டுகளில் நடந்தேறிய வாழ்க்கை சார்ந்த தரவுகள் இதற்குள் பதிவாகி இருக்கின்றன. அந்த வகையில் தாய் வழி சமூகத்தின் வாழ்வியல் கூறுகள் சங்க இலக்கியத்தில் காணக் கிடைக்கின்றன. உருவாகியுள்ள தாய் வழி சமூகமும் மூதின்முல்லையும் காட்டும் சங்கக் கவிதையியலின் இயல்பைப் பற்றி இங்கு ஆராயப்படுகின்றது.

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

**தாய் வழி சமூகம்**

மானுட வாழ்க்கையின் ஆரம்ப காலங்களை ஆராய்கின்ற பொழுது குடும்பம் என்பது ஒரு முக்கியமான கட்டமைப்பாகக் காணப்படுகின்றது. மக்கள் எண்ணற்ற அமைப்புகளில் பங்கு பெற்று அவர்களின் எண்ணங்களை ஒரு முகப்படுத்தி வாழ்ந்தாலும் குடும்ப அமைப்பு முதன்மையிடம் வகிக்கின்றது. இலக்கியம் சமுதாயத்தை உருவாக்கும் அங்கமாகக் காணப்படுகின்றது. இலக்கியம் சமுதாயத்தின் எல்லாக் காலகட்டங்களிலும் தொடர்ந்து உருவாக்கம் பெற்று வந்துள்ளது. குடும்ப அமைப்பை அடிப்படையாகக் கொண்டு இந்த உலகில் இதுவரை உருவான சமூக அமைப்பினை இரண்டாகப் பிரிக்கின்றனர். ஒன்று பெண்ணைக் குடும்பத்தின் தலைமையாகக் கொண்டு உருவான தாய்வழி சமூகம் மற்றொன்று ஆண் தலைமையைக் கொண்ட தந்தை வழி சமூகம். தாய்வழி சமூக அமைப்பில் பெண் அதிகாரம் மிக்க சக்தியாகவும், தந்தைவழி அமைப்பில் ஆண் அதிகாரம் மிக்க சக்தியாகவும் இருந்தனர். இவ்விரண்டு குடும்ப அமைப்பினுள் தாய்வழிச் சமூக அமைப்பு காலத்தால் முற்பட்டது என்பது ஆய்வாளர்களின் கருத்தாக இருக்கிறது. தாய்வழியில் அமையும் தாய்வழிக் குடும்பம் (Matrilineal family) என்று கூறப்படும் தாய்வழிக்குடும்ப முறை கேரோ, காசி போன்ற வட இந்தியப் பழங்குடிகளிடமும், காணிக்காரர், மலைப்பண்டாரம், முத்துவர், ஊராளி, தீயர் போன்ற கேரளப் பழங்குடிகளிடமும் உள்ளது என்பதை அறியமுடிகின்றது.

நாயர்களின் குடும்பமாகிய தறவாடு (Taravadu) தாய்வழிக் குடும்ப முறைக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். தாய் மாமனாட்சி குடும்ப முறை தாய்வழி சமுதாயங்களில் மட்டுமே காணப்படும் என்பது குறிப்பிடத்தக்கது என்கிறார் பக்தவத்சல பாரதி. தாய் அவளின் பெண் மக்கள், சகோதரர்கள், அவர்களின் மனைவி, மக்கள் ஆகியோர் முதன்மையாக இடம்பெற்றிருப்பர். கணவனும் அவரது ஆண்வழி உறவினர்களும் இக்குடும்பத்தில் இடம்பெற மாட்டார்கள் என்பது புலனாகிறது. தாய் உரிமைக் குடும்பத்தில் குடும்பத் தலைவியே எல்லா அதிகாரங்களையும் கொண்டிருக்கிறார். குடும்பங்கள் தோன்றிய காலத்தில் முதன்முதலில் அவை தாய் வழிக் குடும்பங்களாகவே அமைந்திருந்தன என்கிறார் ஆய்வாளர். மேலும் அவர் தாய் உரிமைக் குடும்பத்தில் கணவன் தன்னுடைய மனைவியின் வீட்டில் வாழ்ந்து வருகிறான். இவ்வாறு தாயின் வீட்டில் குடும்பத்தினர் அனைவரும் தங்குவதை அல்லது கணவன் வீட்டில் மனைவி தங்குவதை 'வீட்டுக் குடும்பம்' என்று கூறுவதாக எழுத்தாளர் சாவித்திரி குறிப்பிட்டுள்ளார். தற்காலத்தில் நாம் கூட்டுக்குடும்பம் என்கிறோம்.

**தந்தைவழி சமூகம்**

**ஆண் பொருள் ஈட்டுபவனாக இருந்ததை,**
**வினையே ஆடவர்க்கு உயிரே வாணுதல்**
**மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்(குறுந்.135: 1-2)**

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

குறுந்தொகைப் பாடல் பதிவு செய்கிறது. மட்டுமல்ல பெண்களுக்கு கணவன் உயிர் போன்றவன் என்பதையும் தெளிவுபடுத்துகிறது. இவற்றிலிருந்து பெண் ஆணைச் சார்ந்து வாழ்ந்திருந்தாள் என்பது புலனாகிறது. தொல்காப்பியரும் 'பெருமையும் உரனும் ஆடுஉமேன' (தொல். பொருள். 95) என்றும் பெருமையும், வீரமும் ஆடவர்களுக்கு உரியது என்கிறார். சங்ககாலத்தில் ஆண்கள் மட்டுமே போர்க்களத்தில் போருக்குச் செல்லும் நிலை காணப்பட்டது. ஆண்களுக்கு வீரத்தை ஊட்டி வளர்த்தவள் பெண். ஆடவர்கள் போருக்குச் சென்று வெற்றி பெற வேண்டும் என்ற துணிச்சல் உடையவர்களாக பெண்கள் விளங்கினர். புறப்பொருள் காட்டும் இனக்குழு சமூதாயப் பண்புகள் நிலவிய மூதின்முல்லைச் சமுதாயத்திலும் சீறூர் மன்னனே வேந்துவிடு தொழிற் மேற்சென்று நாடுகாவல் பிரிவு பெருநில வேந்தனோடு பொருதி அவனது' பட்டத்து யானையின் முகபடத்தைப் பரிசாகப் பெற்று தனக்குக் கிடைத்த பரிசுப்பொருட்களைத் தன்னை நாடி வருகின்றவர்களுக்கு கொடுப்பதுடன், தன் மனைவியானவள் உடும்புக் கறியைத் தயிருடன் கூட்டி சமைத்து, புதிய சுவையுடன் கூடிய உணவுகளை விருந்தினருக்கு வழங்குவாள் என்பதை,

**வரு விருந்து அயரும் விருப்பினள்; கிழவனும்,**
**அருஞ் சமம் ததையத் தாக்கி, பெருஞ் சமத்து**
**அண்ணல் யானை அணிந்த**
**பொன் செய் ஓடைப் பெரும் பரிசிலனே (புறம்., 326)**

இப்பாடலடிகள் மனைவியின் விருந்தோம்பு பண்பினையும் கணவனின் போர் வெற்றியையும் பதிவு செய்துள்ளது. இவ்வாறு விருந்தினரை உபசரிக்க தலைவன் வேண்டும் என்ற நிலை இருந்தது. சமூகம் வளர வளர குடும்ப அமைப்பிலும் மாற்றங்கள் ஏற்பட்டன உற்பதி பெருக ஆரம்பித்தது தேவைக்குப் போக எஞ்சியது தானியங்களாகவும், கால்நடைகளாகவும், இதர பொருட்களாகக் கிடைத்தவை வாரிசுரிமை என்பதற்கு வழிகோலியது. தாய்வழி சமூக அமைப்பில் தன்னுடைய குழந்தைகளுக்கு தந்தைகள் யார் என்று தீர்மானிக்கும் அதிகாரம் பெண்ணிடம் இருந்தது. இந்த முறை வாரிசுமுறையில் சிக்கல்களை ஏற்படுத்தியது. எனவே தகராறுக்கு இடமில்லாத வகையில் தந்தையை உறுதிப்படுத்தி குழந்தையை உற்பத்தி செய்வதே அதன் நோக்கமாக இருந்தது. தந்தைவழி சமூகமான அமைப்பு உருவானது. இந்த அமைப்பில் சொத்தின் வாரிசுகளுக்கு குழந்தையைப் பெற்றுத்தரும் கருவியாக பெண் மாற்றப்பட்டாள். இந்த வாரிசு உரிமையும் ஆண்களை மையப்படுத்தியதாக இருந்ததால் ஆண் குழந்தை பிறப்பே கொண்டாடப்பட்டது. தாய்வழி மரபிலிருந்து தந்தைவழி மரபுக்கு மாறிய சமூகச் சூழலை ஆய்வாளர் ஒருவர் பின்வருமாறு கூறுகிறார்.

பூர்வீகக் குடியமைப்பில் தொடக்கத்தில் பெண்களே ஆதிக்க நிலையில் இருந்தனர். பூர்வீகக்குடி தாய்வழி மரபுடையதாய் இருந்தது. அக்காலத்தில் வேட்டையோடும் சேகரிப்போடு, கூட ஆரம்பகாலச் சாகுபடியும் சிறிதளவு நடைபெற்று வந்தது. வீட்டிலிருந்த

பெண்களை பெரும்பாலும் சாகுபடியை நடத்தி வந்தனர். உற்பத்தி சக்திகள் தொடர்ந்து வளர்ச்சியடைந்த போது தாய்வழி மரபு மறைந்து தந்தை வழி மரபு தலை தூக்கியது. ஆடவர்கள் ஆதிக்க நிலை பெறலாயினர். நாடோடி முறையிலான கால்நடை வளர்ப்பின் உதயமே இந்த மாறுதலுக்கு பெருமளவு காரணமாக இருந்தது. (லெவ் லியேண்டியேவ். ப. 32)

**சங்க இலக்கியத்தில் தாய்வழிக் சமூகக் கூறுகள்**

**மூதின்முல்லை**

வீரர்களுக்கு மட்டுமன்றி மறக்குடி பிறந்த மகளிருக்கும் சினமுண்டாதலைச் சிறப்பித்துப் பாடுதல் மூதின்முல்லையாகும். மூதின் மகளிர் - முதிய மறக்குடியில் பிறந்த மகளிர் இதனையே,

**கல்தோன்றி மண்தோன்றா காலத்தே**
**வாளொடு முன்தோனிய மூத்தக்கடி (புற.வெ.மா., 35)**

என்கிறார் ஐயனாரிதனார்.

தாய்வழிச் சமூகக் கூறுகள் சங்க இலக்கியத்தில் குறிப்பிடத்தக்க அளவில் பதிவாகியுள்ளன. சங்க இலக்கியத்தில் இடம்பெற்றுள்ள திருமண நிகழ்வுகள் விவரணைகள் தரும் செய்திகளின் படி திருமணம் நிகழ்ந்த இடமாகப் பெண்ணின் இல்லமே குறிப்பிடப்படுகிறது. அந்த திருமணங்களில் முக்கிய பங்கினை வகித்தவர்கள் பெண்கள் என்பதை அகம். 90 பாடல் சுட்டுகின்றது. திருமணத்திற்கு பின்பு மனைவியின் வீட்டிலேயே கணவன் குடும்பம் நடத்தினான் என்பதை, **"தணங்தனை யாயின் எம் இல் உய்த்துக் கொடுமோ" (குறுந்., 354: 3)** என்ற பாடல் வரியில் இடம்பெற்றுள்ள 'எம் இல்' என்னும் தொடர் பெண்ணின் இல்லத்தைக் குறிப்படுவதாக உரையாளர்கள் கூறுகின்றனர். ஆணின் இல்லம் 'தம் இல்' என்ற தொடரால் குறிப்படப்படுகிறது.

**பெரும்பெயர் உலகம் பெறீஇயரோ அன்னை**
**தம்மில் தமதுண் டன்ன சினைதொறும்**
**தீம்பழந் தூங்கும் பலவின்**
**ஓங்குமலை நாடனை வரும்என் றாளே (குறுந்., 83: 2-5)**

வழிபடு தெய்வங்களின் தொல்குடி மரபில் பெண் தெய்வங்கள் முக்கியத்துவம் பெற்றிருந்தது என்பதற்கு கொற்றவை வழிபாடு ஓர் எடுத்துக்காட்டு. இதற்கான காரணங்களாக கூறும் ஆய்வாளர்கள் தாய்வழிச் சமூக அமைப்பினைக் கூறுகின்றனர். சங்க இலக்கியம் தரும் இத்தகைய செய்திகள் எல்லாம் தாய்வழி சமூகத்தின் கூறுகள் ஆகும். தமிழ் நிலப்பரப்பில் இருந்ததை எடுத்துக் கூறுகின்றன. வேட்டையாடுதல் வழியாக உணவு சேகரிப்பில் ஈடுபட்ட தொல்குடிச் சமூகத்தில் கற்களையும் கம்புகளையும் தவிர வேட்டைக்கான கருவிகள் எதுவும் பெரிதாக இல்லாத நிலையில் அச்சமூகம் மனித ஆற்றலையே பெரிதாக நம்பி இருந்தது. இந்த ஆற்றலைப் பெற்றுத் தரும் ஆதாரமாகப் பெண் இருந்தாள் என்பதை, புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள் என்ற விவிலிய கருத்து (நீதிமொழி 14:1) குடும்பத் தலைவி

**Volume 5, Special Issue 1 (1), January 2025** **E-ISSN: 2583-715X**

பாணருக்கும், பரிசிலருக்கும் உணவு வழங்குவதற்கு உணவு சமைத்த வண்ணம் இருப்பாள் என்பதை (புறம். 334) பார்க்கலாம். இதனையே சிறுமையானவர்களுக்கு தன் கையைத் திறந்து, ஏழைகளுக்குத் தன் கரங்களை நீட்டுகிறாள் (நீதிமொழி 31: 20) என விவிலியம் பதிவு செய்துள்ளது. மேலும் உற்சாகத்தோடு வேலை செய்கிற பெண்களை அவள் வியாபாரக் கப்பல்களைப் போலிருக்கிறாள்; தூரத்திலிருந்து தன் ஆகாரத்தைக் கொண்டுவருகிறாள் (நீதிமொழி 31: 14) என்ற விவிலியக் கருத்து தெளிவுபடுத்துகின்றது. இது பெண்ணின் சமூக இருப்பை, குடும்பத் தலைமையை உறுதி செய்தது.

**ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே**
**சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே (புறம்., 312: 1-2)**

என்னும் வரிகள் குடும்பத்தில் தாயின் முதன்மையினைக் குறிப்பிட்டு நிற்கிறது. அதாவது மகனைப் பெற்றெடுத்தல் மட்டும் தாயின் கடமை அல்ல அவனைச் சமுதாயத்தில் உள்ள சிக்கல்களை எதிர்க்கொள்ளத்தக்க வகையிலும், பயன்படும், வகையிலும் உடல் வலிமையும், மனவலிமையும் உடையவனாகவும் பாதுகாத்து சமுதாயத்திற்கு வழங்குவதும் தாயின் கடமையாகும். இங்கு வீரம் என்பது பெண்குரலில் வெளிப்பட்டு நின்றது. பகைவருடன் நிகழ்த்திய போரில் புறமுதுகு காட்டாமல் களத்தில் வீரத்துடன் நின்று போராடி மாய்ந்த தன் மகன் மீதான பெருமிதத்தை வெளிப்படுத்தும் தாயின் குரலை மூதின்முல்லைப் பாடல் வழியாக அறிந்து கொள்ளலாம். தன் மகன் உடல் கிடந்த நிலைகண்டு அவனைப் பெற்ற நாளில் அவள் கொண்ட மகிழ்ச்சியை விடப் பேருவகை கொண்டாள் என்ற செய்தியைப் பதிவு செய்கிறது. 'சான்றோன்' என தன்னுடைய மகனைப் பிறர் கூறக்கேட்கும் தாய் அவனைப் பெற்றெடுத்த நேரத்தைவிடவும் மகிழ்வாள் என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

**ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்**
**சான்றோன் எனக்கேட்ட தாய் (குறள்., 69)**

இதே குரலை மூதின்முல்லையும் பதிவு செய்கிறது. வீரத்தை முதன்மையாகக் கொண்ட சங்க கால சமூக அமைப்பில் போர்த் தொழிலில் தேர்ச்சியாக இருந்தது. சங்கப்பாடல்களில் சான்றோன் என்ற சொல் - மகன் வீரமுடையவனாக வேண்டும், சமுதாயத்தில் மகன் தந்தையைவிட, கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கம் ஆகியவற்றை நிரம்பப் பெற்றவனாகவும் இருக்க வேண்டும் என்பதை புலப்படுத்துகின்றது. இதே தொனியை,

**களிறு எறிந்து பட்டனன் என்னும் உவகை**
**ஈன்ற ஞான்றினும் பெரிதே (புறம்., 277: 3-4)**

என்ற புறநானூற்றுப் பாடல் அடிகள் சுட்டுகின்றது. இதன் தொடர்ச்சியாக இன்னொரு பாடலில் தன்மகன் இருந்த வயிற்றினைப் புலி இருந்த குகையாகவும் பாவித்து தாய் ஒருத்தி பெருமிதம் கொள்கிறாள். வீட்டிற்கு வந்த தோழியர்கள் கேட்கிறார்கள். உன்னுடைய மகன்

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

எங்கே என்று அதற்கு அந்தத் தாய் கூறுகிறாள். அவன் எங்கிருக்கிறான் எனக்குத் தெரியாது. ஆனால் அந்தப் புலி இருந்த குகை இது என்று தன்னுடைய வயிற்றைக் காட்டுகிறாள்.

**புலி சேர்ந்து போகிய கல் அளை போல,**

**ஈன்ற வயிறோ இதுவே;**

**தோன்றுவன் மாதோ, போர்க்களத்தானே! (புறம்., 86: 3-6)**

என்ற வரிகள். அவன் போர் நிகழும் களத்தில் தோன்றவன் அவனைப் பார்க்க அங்கு தான் செல்ல வேண்டும் என்று பெருமிதத்துடன் கூறினாள். மறக்குடி மகளிரின் எண்ணம் கெடுக இவள் துணிவு மிகவும் அஞ்சத் தக்கது.

**கெடுக சிந்தை கடிதிவள் துணிவே**

**மூதில் மகளிர் ஆதல் தகுமே…**

**…ஒரு மகன் அல்லது இல்லோள்**

**செருமுகம் நோக்கிச் செல்க என விடுமே! (புறம்., 279: 1-11)**

மறக்குடிப் பிறந்த மகள் ஒருத்தியின் துணிவையும் வீரத்தையும் விளக்குவதாக இப்பாடல் அமைகிறது. அதாவது முதல் நாள் போரில் இவள் தந்தை யானையைக் கொன்று தானும் இறந்தான் இரண்டாவது நாள். இவள் கணவன் பசுக் கூட்டங்களை பகைவர்கள் கவரா வண்ணம் தடுத்து நிறுத்தி ஆங்கு பட்டான். இன்று போர் பறை கேட்டவுடன் தன் ஒரே மகனை அழைத்து வேலைக் கையில் கொடுத்து போர்க்களம் செல் என்று கூறி அனுப்பினள்.

துடி கொட்டுப்பவன் குடி, யாழிசைக்கும் பாணர்குடி, பறையடிக்கும் பறையன்குடி, கடம்பனுடையகுடி ஆகிய குடிகளையும் பாதுகாத்து வந்த வீரன் இறந்துவிட்டான். அவ்வீரனை நினைவு கூறும் வண்ணம் நடுகல்நாட்டி அவனை தெய்வமாக வழிபட்டு வந்தனர். நெல்லைத் தூவி வணங்கும் வேறுகடவுளர்களை வணங்கும் வழக்கம் அவ்வூரில் இல்லை. (புறம். 335)

**சிறப்புடையாளன் மாண்பு கண்டருளி**

**வாடு முலை ஊறிச் சுரந்தன**

**ஓடாப் பூட்கை விடலை தாய்க்கே (புறம்., 295: 5-9)**

என்ற பாடல் வரிகள் போர்களத்தில் படைத்திரனின் இடையில் வெட்டுண்டு உடல் சிதைந்து வேறுபட்டான். பின்னிட்டு மூடாத உறுதிமிக்க வீரனாகிய தன் மகனின் உடல் கண்டு அன்பு பெருகி அவனை ஈன்ற தாயின் வற்றிய மார்பிலிருந்து பால் ஊறிச் சுரந்ததாக ஔவையார் பாடியுள்ளார். இதற்கு மறுநிலையான குரலையும் மூதின்முல்லை கூறுகின்றது. தோழியர்கள் தாயிடம் கூறுகிறார்கள். இன்று நிகழ்ந்த போரில் உன்னுடைய மகன் மார்பில் விழுப்புண்பட்டு, புறங்கெடுத்தும் இறந்தனன் என்ற தோழியரின் கூற்று தாயைச் சினம் கொள்ள வைக்கிறது. நீங்கள் சொல்வது உண்மையாக இருந்தால் அவன் பாலருந்திய இந்த மார்பினை அறுத்தெறிவேன் என்று சபதம் செய்கிறாள்.

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

**முளரி மருங்கின், முதியோள் சிறுவன்**
**படை அழிந்து, மாறினன்' என்று பலர் கூற,**
**மண்டு அமர்க்கு உடைந்தனன் ஆயின் உண்ட என்**
**முலை அறுத்திடுவென், யான்' எனச் சினைஇ (புறம்., 278: 2-5)**

என்ற பாடல் வரிகள் தாயின் சினத்தை வெளிப்படுத்துகின்றது.

கணத்துக்கு கணம் மாறுபடும் உணர்வோ நீதான் பெண் என்றார் அறிஞர் ஷேக்ஸ்பியர். அன்பிற்கு இருப்பிடமாக தியாகத்திற்க உறைவிடமாக இருப்பவளே பெண் என்கிறார் அறிஞர் மால்ஸ்டாய். 'உலகை உய்விக்க வந்த உயர்வான ஆத்துமாக்களை அறிந்தவளே பெண்' என்றார் பெரும் மேதை பெர்னாட்ஷா. 'தாய்மையின் தனி இருப்பிடமே பெண்' என்றார் மறைமலையடிகள். அன்பு, அறம், ஆண்மை அனைத்தின் வாழ்வும் வீற்றிருப்பது பெண்மையின் வாழ்வில் என்றார் டாக்டர் மு. வரதாரசனர். இவ்வாறு அறிஞர்கள் போற்றும் வகையில் பெண் விளங்கினாள் என்பது புலனாகின்றது. அங்ஙனம் பந்தலை உடைய இல்லத்தில் வாழ்ந்த தலைவியையும் இதற்கு முற்றிலும் மாறாக நகர புதிய வள மனைகளில் வாழ்ந்த தலைவியரையும் மேற்குறிப்பிட்ட பாடல் சுட்டுகின்றது. மேலும் பெண்களை விண்ணக மகளிரோடு இயைத்துப் பேசப்பட்டு அருந்ததி அனையவராக உயர்நிலையில் காட்டப்படுகின்றன. பதிற்றுப்பத்து பாடல் (பதி., 31). பெண்களின் செல்வச் செழிப்பின் உச்சநிலையை நெடுநல்வாடையும், முல்லைப்பாட்டும் தெளிவுபடுத்துகின்றன. இவ்வாறு பொருளாதார ஏற்றத் தாழ்வுகளுக்கு ஏற்ப பெண்கள் (மனைவியர்கள்) இருந்த நிலையைச் சங்கப்புலவர்கள் விளக்கியுள்ளனர்.

## முடிவுரை

மேற்காட்டிய சங்க இலக்கியப் பாடல்கள் அனைத்தும் மறக்குல மகளிரின் வீரம், விருந்தோம்பல், உழைப்பு ஆகியவற்றிற்கு சான்றுகளாக அமைகின்றன. சங்க காலப் பெண்கள் தன் மானத்தைக் காப்பதற்காகத் தன் கணவனையும், ஒரே மகனையும் போருக்கு அனுப்பி வீரமரணத்தைக் கண்டு பெருமிதம் கொண்டனர் என்பதைப் பார்க்கலாம். சங்க காலத்தில் தாய் தலைமைச் சமுதாயக் குடும்பமும் வழி சமூகக் குடும்பமும் காணப்பட்டன. ஆனால் தாய்வழி உரிமை மறுக்கப்பட்டிருந்தது. ஆணைச் சார்ந்து பெண் வாழ்க்கை பட்டிருந்தாள் என்பதை உணர முடிகின்றது. குடும்ப வாழ்வில் பெண் இரண்டாம் நிலையில் வைக்கப்பட்டிருந்தாள். ஆண் வேந்துவிடு தொழில் வழி பொருள் ஈட்டுபவனாக இருந்தாலும் மூதின் மகளிரின் விருந்தோம்பு தன்மையே சமுதாயத்தில் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது.

## குறிப்புகள்

[1] அய்யனாரிதனார். *புறப்பொருள் வெண்பா மாலை.* புலியூர்கேசிகன் உரை. சாரதா பதிப்பகம், சென்னை, 2009.

**Volume 5, Special Issue 1 (1), January 2025** **E-ISSN: 2583-715X**

[2] அலெக்ஸ் அருள்தாசன், ஞா. "வேளாண் மகளிர் சமூகவியல் சிக்கல்கள்". *தமிழ்மொழி மற்றும் இலக்கியப் பன்னாட்டு ஆய்விதழ்.* தொகுதி. 2, சிறப்பு இதழ் 3, பிப்ரவரி 2020, ப.1.

[3] இளம்பூரணர். *தொல்காப்பியம்.* சாரதா பதிப்பகம், சென்னை, 2017.

[4] சாவித்திரி. *சமூகவியல்.* மோகன் பதிப்பகம், சென்னை, முதல்பதிப்பு, 1987.

[5] தேவதாஸ், பெ.சி. "விவிலியத்தில் கனம் பெற்ற பெண்கள்." *தமிழ்மொழி மற்றும் இலக்கியப் பன்னாட்டு ஆய்விதழ்,* தொகுதி.2, சிறப்பு இதழ் 3, பிப்ரவரி 2020, ப. 2.

[6] பக்தவத்சல பாரதி. பண்பாட்டு மானிடவியல், மெய்யப்பன் பதிப்பகம், சென்னை, பதிப்பு 2016.

[7] பரிமணம், அ. பா, & பாலசுப்பிரமணியன், கு.வெ. *புறநானூறு தொகுதி* - 1, 2. நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை, பதிப்பு 2004.

[8] மாதையன், பெ. சங்க *இலக்கியத்தில் குடும்பம்.* நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை, பதிப்பு 2010.

[9] நாகராசன், வி. *குறுந்தொகை.* நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை, 2007.

[10] *ஹோலி பைபிள்.* NJKV பதிப்பு.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் [https://creativecommons. org/licenses/by/4. 0/](https://creativecommons.org/licenses/by/4.0/) கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.